வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ஸ்ரீஉழவாய் அம்மன் ஸ்ரீசேவியப்பன் வரலாறு

**மு.பிரபாகரன்**
**முனைவர்பட்டஆய்வாளர்**
**தமிழாய்வுத்துறை, தூயவளனார்தன்னாட்சிக்கல்லூரி**
**திருச்சி - 2**

ஆய்வுச் சுருக்கம்:

மனிதன் எப்போது தோன்றிச் சிந்திக்க தொடங்கினனோ அன்று முதல் இன்று வரை தனக்கு மேல் ஒரு சக்தி இருப்பதாக நினைத்து அதை அறிய முற்படுகிறான். அதை பல வடிவங்களில் உருவம் செய்தும் உருவம் கொடுக்காமலும் வழிபட்டு வருகின்றான். இயற்கை வழிபாடு, நடுகல், சிறு தெய்வம், குலதெய்வம், ஊர் தெய்வம், எல்லைத் தெய்வம் என விரிவடைந்து கொண்டே செல்கின்றது. அந்த வகையில் உழவாய் அம்மன் சேவியப்பன் என்னும் சிறு தெய்வத்தை ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை :

தமிழகம் மிகவும் பண்பட்ட பாரம்பரியத்தை உடைய சமூகத்தினர் வாழும் பகுதியாகும். இங்குப் பல்லாயிரக்கணக்கான சிறு தெய்வங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிறு தெய்வத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. சமூகத்தால் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களும் ஆண்களும் சிறு தெய்வமாகக் காட்சியளிக்கின்றனர். அந்த வகையில் உழவாய் அம்மன் சேவியப்பன் வரலாறும் அமைகின்றது. இத்தெய்வங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வழிபாட்டின் தோற்றம்:

ஆதிகால மனிதன் தனது தேவைகளுக்காகத் தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருந்தான். குளிர்காலங்களில் குகைகளிலும் கோடை காலங்களில் சமவெளிப் பகுதிகளிலும் தங்கினான். மனிதன் உணவு, உறையுள் தேவைகளுக்காகத் தேடி அலைந்த பொழுது பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தன. இன்னல்களில் சிக்கி சிலர் உயிரிழந்தனர். இதைக் கண்ட பிறர் செய்வதறியாது அஞ்சினர். உயிரிழப்புக்குக் காரணமான இயற்கை சீற்றங்கள் மற்றும் விலங்குகளைக் கண்டு வணங்கத் தொடங்கினான். இவ்வாறாக மனிதன் முதலில் வணங்கியது இயற்கையையும் மனிதனை விட பலம் பொருந்திய விலங்குகளையும் தான்.

இனக்குழுக்கள் உணவுத் தேவைக்காக இடம்பெயரும் போது அங்கு ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருக்கும் இனத்துடன் மோதல்கள் ஏற்படும். அதில் தன்னுடைய இனத்தைக்

காக்கும் பொருட்டு பலர் உயிர் தியாகம் செய்தனர். அவர்களைப் போற்றும் விதமாகவும் மற்றும் இனத்தைக் காக்கும் மற்றவருக்கு உத்வேகம் அளிக்கும் பொருட்டும் இறந்தவரின் நினைவாக அவர்களின் உருவம் பொறித்த கல்லை நட்டு அவர்களுக்குப் பிடித்த உணவுப் பொருட்களை வைத்து வணங்கினர். “நலன் பெருகவும் நன்றிக்கடன் செலுத்தவும் இயற்கையை வணங்க ஆரம்பித்தார்கள். கதிர் வழிபாடும் மாரி வழிபாடும் விண் வழிபாடும் மண் வழிபாடும் இப்படித் தான் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் ”1என்றுசக்திவேல்.சுகுறிப்பிடுகிறார்.

சிறு தெய்வத்தின் வகைகள்:

அச்சம் காரணமாக இயற்கையை வழிபட்ட மனிதன் நாளடைவில் சிறு தெய்வ வழிபாட்டை மேற்கொள்ளத் தொடங்கினான். தன் குடும்பத்தையும் ஊர் மக்களையும் காக்கும் பொருட்டுப் போராடி உயிர் நீத்த முன்னோர்களை நடு கற்கள் செய்து வணங்கத் தொடங்கி அது பின்னர் வளர்ச்சி பெற்று சிறு தெய்வமாக மாறியுள்ளதைக் காண முடிகிறது.“வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்விலிருந்தும் குற்ற உணர்விலிருந்தும் உண்டாயிருப்பதாக சிக்மண்ட் பிராய்டு”2 குறிப்பிடுகிறார்.

குலதெய்வம் என்பது தன் குடும்பம் காக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தங்கள் நல்லுயிரைத் தந்த ஆண் பெண் யாராக இருப்பினும் அவர்களைக் குடும்பத்தினர் குலதெய்வமாக ஏற்று வழிபடுகின்றனர். சிறு தெய்வங்கள் குலதெய்வமாக மாறும் சிறு தெய்வத்தை வணங்கிய குடும்பம் விரிவடையும்போது அது குலதெய்வமாக உருவெடுக்கும்.

குலத்திற்கு அடுத்த நிலையில் இருப்பது ஊர்த் தெய்வங்கள் ஆகும். பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் மாரியம்மன் தான் ஊர்த் தெய்வமாகக் காணப்படுகின்றது. ஊரில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் கூடி வணங்கி விழாக்கள் எடுத்துக் கொண்டாடுவர்.

குலத்தெய்வத்தைப் போன்று ஊரின் எல்லையில் அமர்ந்து ஊருக்கு எந்தத் தீங்கும் வந்துவிடாமல் காக்கும் தெய்வம் எல்லைத் தெய்வம் அல்லது காவல் தெய்வமாகும். எடுத்துக்காட்டாக அய்யனார், முனியப்பன், காளியம்மன், கருப்புசாமி போன்றவர்களைச் சொல்லுவர்.

ஸ்ரீஉழவாய் அம்மன் ஸ்ரீசேவியப்பன்:

இக்கோயில் சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் தாண்டவராயபுரத்தின் தென்பகுதியில் மலையடிவாரத்தில் குடி கொண்டிருக்கும் சிறு தெய்வமாகும். இக்கோயில் தோன்றி சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் என ஊர் மக்கள் கூறுகின்றனர். கோபமான முகத்துடன் கூடிய உழவாய் அம்மன் மற்றும் சேவியப்பன் உருவச் சிலைகள் பார்க்கும்போதேஅச்சத்தை ஏற்படுத்தும். வேம்பும் அரச மரமும் இணைந்த மரத்தடியில் கம்பீரமாக அமர்ந்த கோலத்தில் காட்சி அளிக்கின்றனர்.

கோவிலின் ஆணிவேர் வேப்பூர் வட்டம் திருப்பயிர் என்னும் இடத்தில் உள்ளது. ஒரு காலத்தில் உழவாய் மற்றும் சேவியப்பன் இருவரும் மக்களுடன் மக்களாக வாழ்ந்த மனிதர்கள். இன்று தெய்வமாகப் பலராலும் வணங்கப்பட்டு வருகின்றனர். உழவாய் உயர் சாதியைச் சேர்ந்த பெண்ணாகும். சேவியப்பன் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர். இருவருக்கும் காதல்

ஏற்பட்டுப் பேசி பழகி வந்தனர். இதைக் கேள்விப்பட்ட உழவாயின் தந்தை மற்றும் சகோதரர்கள் சேவியப்பனைக் கொன்று விடுகின்றனர். இதனால் உழவாய் திருமணம் செய்து கொள்ளாமல் அவன் இறந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுகின்றாள்.

சில காலங்கள் கழிந்த பின்பு உழவாய் மற்றும் சேவியப்பன் இருவரையும் உருவமாகச் செய்து வழிபடத் தொடங்கினர். தாழ்த்தப்பட்ட மக்களின் குலதெய்வமாக மாறிவிட்டது. இன்று அவர்கள் சேவியப்பன் வகையறா என்று கூறிக் கொள்கின்றனர். சூழல் காரணமாக இடம்பெயரும் மக்கள் அங்கிருந்து ஒரு கைப்பிடி மண்ணை எடுத்து வந்து அவர்கள் குடியேறிய பகுதியில் கோவிலைக் கட்டி வழிபடுகின்றனர்.

விழாக்களும் சடங்குகளும்:

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை உழவாய் அம்மன் சேவியப்பனுக்கு விழாக்கள் எடுக்கப்படுகின்றன. வைகாசி, ஆனி, ஆடி இந்த மாதங்களில் ஏதேனும் ஒரு மாதத்தில் வெள்ளி சனி, ஞாயிறு எனும் மூன்று நாட்கள் விழா நடக்கும். பல்லியின் ஒலி கேட்டல் மற்றும் வேப்பிலையின் மூலமாக வாக்குக் கேட்பர்.வாக்குக் கிடைத்த பின்புதான் விழாவுக்கான தேதியை முடிவு செய்கின்றனர். பந்தக்கால் நட்டு அதில் பாலை மரத்தின் இலையை வைத்துக் கட்டுகின்றனர். அதில் சந்தனம் குங்குமம் கலந்து தெளிக்கின்றனர். பந்தகாலுக்கு எலுமிச்சை பழத்தை அறிந்து அதில் சிகப்புத் தடவி வைக்கின்றனர். அந்தக் கோவிலுக்கு மட்டும் 70 தலகட்டு இருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் அனைவரும் தங்கள் வீடுகளைச் சுத்தம் செய்து விழாவை வரவேற்கின்றனர். கோயிலுக்கு முளைப்பாரி, தீச்சட்டி, பால்குடம் எடுப்பவர்கள் தங்களின் கைகளில் மஞ்சள் துணியில் கிழங்கு மஞ்சளை வைத்துக் கட்டிக் கொள்வர்.

விழாவின் முதல் நாள் சாமி குடியழைத்தல் என்னும் நிகழ்வு நடைபெறும். கோயிலின் அருகில் உள்ள ஓடையில் சென்று சாமியிடம் அருள்வாக்குப் பெற்று வந்து சிலைகளுக்கு உயிரூட்டும் நிகழ்வே குடியழைத்தல் எனப்படும். இந்நிகழ்வில் பெண்கள் இடம் பெறுவதில்லை. அதைத் தொடர்ந்து இரண்டாம் நாள் உழவாய் அம்மனுக்குப் பொங்கல் வைத்தும் மாவிளக்கு எடுத்தும் வழிபடுகின்றனர். சாமிகளுக்குப் படையலிடும்போது உமிழ்நீர் படக்கூடாது என்பதற்காக வாயை இறுக்கமாக துண்டால் கட்டிக் கொள்கின்றனர். சுமார் 200க்கும் மேற்பட்டவர்கள் பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர். முதல் பொங்கல் உயர் சாதி சமூகத்தினர் வைக்கின்றனர். மூன்றாம் நாள் காலை 4 மணி முதல் 6:00 மணிக்குள் உழவாய் அம்மன் சிலையின் கண்ணைத் துண்டால் கட்டி விட்டு கோழி, ஆடு, ஒரு எலுமிச்சை பழம் அல்லது பூசணிக்காயைப் பலி கொடுப்பர். அதாவது முப்பூசை போடுதல் என்னும் பழக்கம் அந்த வட்டாரத்தில் காணப்படுகிறது. ஆடு, கோழி, பன்றி மூன்றையும் அறுத்து பலி கொடுப்பதை முப்பூசை ஆகும். இதில் பன்றிக்குப் பதிலாக எலுமிச்சை அல்லது பூசணிக்காயைச் சேர்த்துக் கொள்கின்றனர். மாலை நேரத்தில் குடி விடுதல் நிகழ்வும், மஞ்சள் நீராட்டு விழாவும் நடைபெறும்.

கோயிலின் சிறப்புகள்:

குழந்தை வரம் வேண்டுபவர்கள் தங்களின் முந்தானையின் சிறு பகுதியைக் கிழித்து அதில் சிறிய கல்லை வைத்துக் கட்டி கோயில் மரத்தில் கட்டினால் குழந்தை பேறு கிட்டும் என்பது நம்பிக்கையாகும். வேண்டுதல் வைப்பவர்கள் அது நிறைவேறும் போது சூலாயுதம், குதிரை, வேட்டை நாய், கன்னிமார் தெய்வங்கள் போன்ற ஏதாவது ஒரு உருவத்தைச் செய்து வைத்து வழிபடுகின்றனர். வாரத்தில் வெள்ளிக் கிழமைகளில் விளக்கு ஏற்றி வழிபட்டால் நினைத்தது நடக்கும் என்பார்கள். இவ்வாறாக உழவாய் அம்மன் சேவியப்பன் வழிபாடு தொடர்கின்றது.

முடிவுரை:

தமிழ்நாட்டில் இதுபோன்ற ஆயிரக்கணக்கான சிறு தெய்வங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வரலாறு உண்டு சாதி, மதம் மற்றும் பொருளாதார முதலிய சமூக இன்னல்களால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் பிரதிபலிப்பே சிறுதெய்வமாகும் . தமிழ்ச் சமூகம் என்னதான் பண்பட்ட பாரம்பரியத்தை உடையதாக இருந்தாலும் இது போன்ற நிகழ்வுகள் இன்னும் தொடர்ந்து கொண்டே தான் இருப்பது வருத்தத்தை ஏற்படுத்துகின்றது.

துணைநின்ற நூல்கள்:

1.அவினாசிலிங்கம் செட்டியார் தி.சு - கலைக்களஞ்சியம்
தமிழ் வளர்ச்சிக் கழகம்
சென்னை
பதிப்பாண்டு -1954
2. சக்திவேல்.சு - நாட்டுப்புற இயல் ஆய்வு
மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை –08
முதல் பதிப்பு -